Government Agricultural College and Research Institute, Coimbatore

*16 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to convert the Government Agricultural College and Research Institute, Coimbatore into an Agricultural University ?

அரசினர் வேளாண்மைக் கல்ரி ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்

திரு. வி. ஈசுவரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோவையிலுள்ள அரசினர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தை வேளாண்மைப் பல்கலைக் கழகமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பல மாநிலங்களில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் செயல்படுவதை, அவ்விடங்களுக்குச் சென்று பார்த்து, இம்மாநிலத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஏற்படுத்துவதற்கான தேவையைப் பற்றி அரசாங்கத்துக்குத் தெரிவிப்பதற்காக, அலுவலர் ஆராய்ச்சிக் குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்துள்ளது.

Mr. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—STATEMENT *re* HEALTH OF THE HON. THE CHIEF MINISTER

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல் நிலை பற்றிய அறிவிப்பு கொடுக்க விரும்புகிறேன். நேற்று மாலையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு திடீரென ரத்த அழுத்தக் குறைவு ஏற்பட்டது. அவருக்கு அளிக்கப்பட்ட அறுவை சிகிச்சையை யொட்டி ரேடியம் ஊசிகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. அந்த ரேடியம் ஊசியின் விளைவுகள் இருதயப் பாகத்தை சற்று பாதித்திருக்கக்கூடும் என்று டாக்டர்கள் கருதுகிறார்கள். ரத்த அழுத்தக் குறைவினாலும், நெஞ்சு வலியினாலும், சற்று பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. உடன் டாக்டர்கள் விரைந்து சிகிச்சைகள் மேற்கொண்டு ரத்தமும் செலுத்தப்பட்டது. இரவு 11 மணிக்கு மேல் ரத்த அழுத்தம் சீர்ப்பட்டது. பிறகு நல்ல தூக்கம் இருந்தது. உடல் நிலை சீர்பட்டு இருக்கிறது. டாக்டர்கள் உடன் இருந்து கவனித்து வருகிறார்கள் என்ற செய்தியை இந்தப் பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

III.—MEETING OF THE COUNCIL FROM 4 P.M. TO 6 P.M. DAILY.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சட்ட மன்ற பேரவைக் கூட்டம் 1–30, 2, 2–15 மணி வரை நடைபெறுவதால் அதை முடித்து விட்டு மேலவைக்கு வர போதுமான அவகாசம் அமைச்சர்களுக்கு இல்லாத காரணத்தால் மேலவைக் கூட்டத்தை 4 மணிக்கு ஆரம்பித்து 7 மணி வரை வைத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் கேட்டேன். அவர்கள் இசைவு தந்திருக்கிறார்கள். மற்ற தலைவர்களும் இசைவு தந்து இருக்கிறார்கள். மேலவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும், சிறப்பாக நடைபெறவும் வழி வகுக்கும் என்ற காரணத்தால் அந்த ஏற்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.